

நகர் ஊரமைப்புத்துறை(DTCP)

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்

பல்லடம் ஊராட்சி ஒன்றியம் - ஆறுமுத்தாம்பாளையம் ஊராட்சி

திருப்பூர் மாவட்டம்,பல்லடம் வட்டம் ஆறுமுத்தாம்பாளையம் ஊராட்சி மற்றும் நாரணாபுரம் கிராமம் க.ச.எண்:430/1B மற்றும் 430/2-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்(திட்டமில்லாத பகுதி).

அளவு : 1 : 500 (அ) (1செ.மீ= 5 மீ)

இணையதள விண்ணப்பம் எண் : DWEI452X, நாள்: 20.09.2022

வ

குறிப்பு :

மனைப்பிரிவின் மொத்த பரப்பு	:	1.92 ஏக்கர் (அ) 7760.00 ச.மீ
கோரிய மனைகள்	:	36
ஒதுக்கிய மனைகள்	:	36
மனைப்பிரிவின் எல்லை	:	
நிலையிலுள்ள சாலை	:	

பொது ஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

I.மனைப்பிரிவு சாலை பரப்பு - 2681.84 ச.மீ

II.பூங்கா

i)ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு = (7760.00 - 2681.84) X (10/100) = 507.82 ச.மீ

ii) ஒதுக்கப்பட்ட பூங்கா பரப்பு } **507.82** ச.மீ (மனுதாரரால் பூங்கா பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பீட்டுத் தொகை ரூ.211251.00 செலுத்தப்பட்டது.)

III . பொது உபயோகம்

A) உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு } (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x (0.5/100) (7760.00 ச.மீ - 2681.84 ச.மீ) x (0.5/100) = 25.39 ச.மீ

உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 62.89 ச.மீ (1.24 %)

B) TANGEDCO-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு } (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x (0.5/100) (7760.00 ச.மீ - 2681.84 ச.மீ) x (0.5/100) = 25.39 ச.மீ

உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 45.88 ச.மீ (0.90 %)

கட்டிட வரம்பு :

9.0 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50 மீ விடப்படல் வேண்டும்.
9.0 மீ -க்கு மேல் 18.0 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.00 மீ விடப்படல் வேண்டும்

மூலை முடக்கு :

12.0 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5 மீ x 1.5 மீ விடப்படல் வேண்டும்

நிபந்தனைகள் :

1.அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020 -ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2.அரசாணை எண்.181 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020-ன்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி , மழைநீர் வடிகால் வசதிகள் , மேல்நிலைத்தொட்டி தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதி மனுதாரரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதி செய்து பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.

3.இம்மனைப்பிரிவிற்கு ஊராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனினும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் , ஆறுமுத்தாம்பாளையம் ஊராட்சி தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4.நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சுழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் ,சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.

5.விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

6.ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் , விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6 மீ x 1.2 மீ என்ற குறைந்தபட்ச அளவிலான நிரந்திர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

7.உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலையாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து ஊராட்சி ஒன்றிய பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.

SWP / DTCP / TIRUPPUR / LAYOUT . No .399/2022

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் / உதவி இயக்குநர்(மு.கூ.பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்;

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Tiruppur
Date:2022.12.26 17:04:43